[Sri M. Bhaktavatsalam] [18th December 1956

The Government of India have made arrangements to get further shipments of rice from Burma, China and America, regularly in future, and they have assured this Government that the requirements of the fair price shops in the State will be met liberally.

The situation during the past two weeks has considerably improved. As a result of the opening of a larger number of fair price shops and the prospect of a good samba harvest and less pressure for export from Tanjore, the prices are showing an easier trend as hon. Members might have read in the newspapers. In Tanjore, Tiruchirappalli and Coimbatore, the prices are reported to have fallen considerably by Rs. 3 to Rs. 4 per bag. It will take some time for this to be fully reflected in retail prices. But it is already reported that in Madras City, the offtake of rice in the T.U.C.S. fair price shops has decreased to some extent. If, as there is some reason to hope, the downward trend of prices is maintained, it may be said that we have turned the corner and that with the coming harvest of samba in January 1957, further improvement may be expected and there should be no room for anxiety about high prices of foodgrains in the State. In any case there is no shortage anywhere.

IV.—POINT OF INFORMATION *RE* LEGISLATION GOVERNING WORKERS OF BEEDI INDUSTRY.

Sri M. KALYANASUNDARAM : கடந்த சட்ட சபைக் கூட்டத்தில் கனம் தொழில் அமைச்சர் அவர்கள் பீடித் தொழிலாளர்கள் சம்பந்தமான மசோதாவை இந்தக் கூட்டத்தில் கொண்டுவருவதாக வாக்களித்தார்கள். அது சம்பந்தமான எந்த நடவடிக்கையும் எடுப்பதற்கான அறிகுறி தென்படவில்லை. இது எந்த நிலைமையில் இருக்கிறது, என்ன நடவடிக்கை உத்தேசிக்கப்பட்டிருக்கிறது, இந்த மசோதா வெளியிடப்பட்டு சபையின் இந்தக் கூட்டத்திலேயே கொண்டு வரப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

The Hon. Sri M. BHAKTAVATSALAM : கனம் உதவி சபாநாயகர் அவர்களே, இந்த மசோதா தயாரிக்கப்பட்டுவிட்டது. அதற்கு மேல் கவனம் செலுத்தப்பட்டு வருகிறது. கூடிய சீக்கிரத்தில் இந்த சட்ட சபைக் கூட்டத்திலே அந்த மசோதாவைக் கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு முயற்சி செய்கிறேன் என்பதை மட்டும் இந்த சமயத்தில் சொல்லிக் கொள்கிறேன். முடியுமானால் அதை உடனே பிரசுரித்து சீக்கிரத்தில் சபை முன்பு கொண்டு வருகிறேன், கனம் அங்கத்தினர்களுடைய ஒத்துழைப்பும் இருந்தால்.

V.—GENERAL DISCUSSION ON THE BUDGET FOR THE YEAR 1957-58.

DEPUTY SPEAKER : We now proceed to the next item on the agenda, namely, general discussion on the Budget for the year 1957–58. Sri P. Jeevanandam will initiate the discussion.

Sri P. JEEVANANDAM : அவைத் தலைவர் அவர்களே, நமது சென்னை சட்ட சபையின் சரித்திரத்திலே, மக்களின் பிரதிநிதிகளான அங்கத்தினர்களாகிய நாம் அத்தனை பேரும், நிதி அமைச்சரவர்கள் வரவு செலவுத் திட்டத்தைச் சமர்ப்பிக்கிறபோது புரிந்து கொள்ளத் தக்கதொரு தருணம் முதல் முறையாக இந்த வரவு செலவுத் திட்டத்தில்தான் நமக்குக் கிடைத்திருக்கிறது என்பது நம் எல்லோருக்கும், தமிழ் மக்கள் எல்லோருக்கும் மிகவும் மகிழ்ச்சியைத் தரத் தகுந்த ஒரு செய்தியாகும். சென்ற கூட்டத்தில் தமிழில் அச்சேற்றிய வரவு செலவுத் திட்டம் அளிக்கப்பட்டது. இந்தக் கூட்டத்தில் தமிழிலேயே படிக்கப்பட்டது. இது,